**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 124 /2023**

| | | | |
|---|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 3 | **Caste** | |
| **Witness Name** | சரவண பாண்டியன் | **Calling** | கட்டிட பொறியாளர் |
| **Father's Name** | பாண்டித்துரை | **Religion** | |
| **Village** | மாயாண்டி சாமி நகர் | **Age** | **32** |
| **Taluk** | புதுக்கோட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2024.

**( எதிரி ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் மாயாண்டி சாமி நகரில் குடியிருந்து வந்து கட்டிட பொறியாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 23.05.2023 அன்று கணேசன் என்பவருக்கு மருப்பிணி சாலை அருகே நடந்த விபத்து சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்த போது நான் சாட்சியாக உடன் இருந்து பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தேன். **பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> - எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 124 /2023**

| | | | |
|---|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 2 | **Caste** | |
| **Witness Name** | சதீஸ்குமார் | **Calling** | தனியார் வேலை |
| **Father's Name** | ஹரிதாஸ் | **Religion** | |
| **Village** | சக்கரவர்த்தி நகர் | **Age** | **39** |
| **Taluk** | புதுக்கோட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2024.

**( எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் சக்கரவர்த்தி நகரில் குடியிருந்து வந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.05.2023 அன்று நானும், விபத்தில் இறந்து போன கணேசன் என்பவரும் சக்கரவர்த்திநகரில் உள்ள வீட்டு எண் .10 என்கிற எனது வீட்டு வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்தோம்.

2. சிறிது நேரத்தில் கணேசன் அவருடைய இரு சக்கர வாகனத்தில் புறப்பட்டு கடைக்குச் சென்றார். சிறிது நேரம் கழித்து அவர் திரும்பி வந்த போது நான் அவருக்காக எனது வீட்டு வாசலில் காத்திருந்தேன். கணேசன் என்னை நோக்கி வந்துக் கொண்டிருந்த போது வாகனத்தை இன்டிகேட்டர் போட்டு வலதுபுறமாக கணேசன் திருப்பிய போது ஆஜர் எதிரி 4640 என்கிற பதிவெண் கொண்ட பச்சை நிறம் கொண்ட Royal enfield என்ற வாகனத்தை சராசரி வேகத்தில் ஓட்டிக் கொண்டு வந்து கணேசன் மீது மோதியதில் இரண்டு பேரும் கீழேவிழுந்துவிட்டனர்.

3. கணேசனின் தலை சாலையில் மோதியது. கணேசனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் அவசர ஊர்திக்கு போன் செய்தேன். கணேசனின் மனைவி அ.சா.1 க்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். கணேசனை சிகிச்சைக்காக அ.சா.1 PMCH க்கு அழைத்துச் சென்றார்.

4. கணேசன் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் வந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 124 /2023**

| | | | |
|---|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 1 | **Caste** | |
| **Witness Name** | ஜானகி | **Calling** | வீட்டுக்குடித்தனம் |
| **Father's Name** | கணேசன் | **Religion** | |
| **Village** | **சக்கரவர்த்தி நகர்** | **Age** | **60** |
| **Taluk** | **புதுக்கோட்டை** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2024.

**( எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் சக்கரவர்த்தி நகரில் குடியிருந்து வந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். கடந்த 22.05.2023 அன்று நான் வீட்டில் இருந்த போது எனது கணவர் கணேசன் அவருடைய இரு சக்கர வாகனத்தில் சக்கரவர்த்தி நகர் பிரிவு சாலை அருகே சென்றுக் கொண்டிருந்த போது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த புல்லட் ஒன்று எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சதீஸ் என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்.

2. நான் உடனடியாக சம்பவ இடம் சென்று பார்த்த போது எனது கணவர் மயக்க நிலையில் இருந்தார். எனது கணவரின் நெற்றியில் காயம் இருந்தது. எனது கணவருக்கு வலது காதில் இருந்து இரத்தம் வந்தது. நான் அவசர ஊர்தி மூலமாக எனது கணவரை சிகிச்சைக்காக PMCH க்கு அழைத்துச் சென்றேன்.

3. மறுநாள் 23.05.2023 அன்று எனது கணவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை பலனின்றி அன்று இரவு 02.20 மணியளவில் எனது கணவர் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர்.

4. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.